**செய்தி வெளியீடு எண்:258** **நாள்:27.05.2009**

## செய்தி வெளியீடு

மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை தமிழக அரசு அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டது. பல்வேறு அலுவலர் சங்கங்களையும், அமைப்புகளையும் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைப் பெற்று பரிசீலித்த பின்னர், இக்குழு தனது அறிக்கையை இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தது. அப்போது தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இக்குழுவின் தலைவரான உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எம். குற்றாலிங்கம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை செயலாளர் திரு.கே.என். வெங்கட்ரமணன் ஆகியோர் உடன் இருந்தனர். குழுவின் அறிக்கையை பரிசீலித்து அரசு உரிய ஆணைகளை விரைவில் வெளியிடும்.

***************

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.**